# நற்செய்தி புதிய இடங்களுக்கு செல்லுகிறது.

## ஆதி சுவிசேஷ ஊழியர்களுக்குக் குழந்தைகளை அறிமுகம் செய்தல்



பின்வரும் குழந்தைகளின் கல்வி செயல்பாடுகளில் எதையாவது தெரிந்து கொள்ளவும்.

அந்தியோகியா சபை எவ்வாறு ஊழியர்களை அனுப்பியது என்ற **கதையை ஒரு பெரிய பிள்ளையோ ஆசிரியரோ கூறட்டும்** அல்லது வாசிக்கட்டும் (அப்.13:1-16 & 32-52). இயேசுவைப் பற்றிய நற்செய்தியைப் பிற இடங்களுக்கு எடுத்துச் செல்ல சபை எவ்வாறு பவுலையும் பர்னபாவையும் அனுப்பியது என்று கூறவும்.

பின்வரும் **கேள்விகளைக் கேட்கவும்.** பதில் ஒவ்வொரு கேள்விக்கும் பின் வருகிறது.

- சவுலையும் பர்னபாவையும் தனியாகப் பிரித்து எடுக்குமாறு தேவன் கூறியபோது விசுவாசிகள் என்ன செய்து கொண்டு இருந்தனர்? (வசனம் 2)
- தங்களுடைய ஊழியக் குழுவாக சவுலையும் பர்னபாவையும் அனுப்பும் முன்னர் விசுவாசிகள் என்ன செய்தனர்?(3)
- இயேசுவைப் பற்றி ஜனங்கள் அறிய முடியாதபடி செய்ய முயன்று கொண்டு இருந்த மாயவித்தைக்காரனை தேவன் எவ்வாறு தடுத்தார்? (11)
- ஜனங்கள் எவ்வாறு பாவ மன்னிப்பைப் பெறமுடியும்? (38)
- நற்செய்தியைப் புறக்கணித்த மக்கள் கூட்டத்தார் யார்? (45 -46)
- பட்டிணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட போது பவுலும் பர்னபாவும் என்ன செய்தனர்? (51)

இந்தக் கதையின் ஒரு பகுதியை **நாடகமாக்குக:**

- இந்த நாடகத்தை அரங்கேற்ற சபைத் தலைவரோடு பேசி ஏற்பாடு செய்க.
- குழந்தைகளுடன் நேரம் செலவழித்து நாடகத்தை ஆயத்தம் செய்யவும்.
- எல்லா பகுதிகளையும் பயன்படுத்தத் தேவை இல்லை.
- ஆயத்தம் செய்வதில் சிறிய பிள்ளைகளுக்குப் பெரியவர்கள் உதவி செய்யவும்.
- **பெரிய பிள்ளைகள்** அல்லது பெரியவர்கள் பவுல் மற்றும் கதை கூறுபவரின் வேடங்களை ஏற்கவும்.
- **சிறிய பிள்ளைகள்** பின்வரும் வேடங்களை ஏற்கவும்:
  பர்னபா
  அதிபதி
  மாயவித்தைக்காரன்
  கிறிஸ்தவர்கள்
  யூதர்கள்
  புறஜாதி மக்கள்

## நாடகம், பகுதி 1, அப்.13:1-3

**கதை கூறுபவர்:** கதையின் முதற் பகுதியைக் கூறவும் (வசனம் 1-3). கூறவேண்டியது, “கிறிஸ்தவர்கள் கூறுவதைக் கேளுங்கள்”.

**கிறிஸ்தவர்கள்:** “எல்லோரும் ஒன்றாக உபவாசித்து தேவனிடம் ஜெபிப்பது நல்லது.” “ஊழியர்களை அனுப்புமாறு பரிசுத்த ஆவியானவர் நம்மிடம் கூறுகிறார்.”

பர்னபா : “ஆம்! நாங்கள் நற்செய்தியைப் புதிய இடங்களுக்கு எடுத்துச் செல்வோம்.”

**கிறிஸ்தவர்கள்:** “முழங்கால் படியிடுவோம்”. “நாங்கள் உங்கள் மேல் கைகளை வைத்து உங்களுக்காக ஜெபிப்போம்” “தேவன் விரும்பும் இடத்துக்கு உங்களை அனுப்பவே இவ்வாறு செய்கிறோம்.”

**பவுலும் பர்னபாவும்:** முழங்கால்படி இடுகின்றனர்.

**கிறிஸ்தவர்கள்:** இருவர் மீதும் கைகளை வைத்து ஜெபிக்கின்றனார்.

**பவுலும் பர்னபாவும்:** ஒரு புறமாக நடந்து செல்லுதல்.

## பகுதி 2, அப்.13:4-12

**கதை கூறுபவர்:** கதையின் இரண்டாவது பகுதியைக் கூறுக (வசனம் 4-12). பின், சொல்ல வேண்டியது, “ரோம அதிகாரி கூறுவதைக் கேளுங்கள்.”

**அதிகாரி:** “சென்று பவுலை அழைத்து வாருங்கள். நான் இயேசுவைப் பற்றி கேட்க வேண்டும்.”

**மாயவித்தைக்காரன்:** “இல்லை, ஐயா, பவுலை அழைக்க வேண்டாம். அவனது தவறான செய்திகளை நீர் கேட்கக் கூடாது.”

பவுல் : “மாயவித்தைக்காரனே! நீ இந்த மனிதரை ஏமாற்ற முயற்சி செய்கிறாய். தேவன் உன்னைக் குருடாக்குவார்.”

**மயாவித்தைக்காரன்:** கண்களைப் பொத்திக் கொண்டு தடுமாறி கூறுகிறான், “என்னால் பார்க்க முடியவில்லை! என் கைகளைப் பிடித்துக் கொள்ளுங்கள்.”

அதிகாரி : “பவுலே! இந்த மாயவித்தைக்காரனின் கடவுளை விடவும் உமது தேவன் வல்லமையானவர். நான் உமது தேவனைப் பற்றி இன்னும் கேட்க விரும்புகிறேன்.”

## பகுதி 3, அப்.13:13-16 & 32-52

**கதை கூறுபவர்:** கதையைக் கூறி முடிக்கவும், (வசனங்கள் 13-16 & 32-52). கூறவேண்டியது, “பவுல் கூறுவதை இதோ கேளுங்கள்.”

பவுல் : “இயேசுவைப் பற்றிய நற்செய்தியைக் கேளுங்கள். தேவன் அவரை மரித்தோரில் இருந்து எழுப்பினார். அவர் உங்கள் பாவங்களை மன்னிப்பார்.”

யூதர்கள் : “இந்தப் பைத்திக்காரன் கூறுவதைக் கேட்காதீர்கள்.”

பர்னபா : “முதலில் நாங்கள் உங்களிடமே பேசவேண்டி இருந்தது. ஆனால் நீங்கள் இயேசுவைப் புறக்கணித்தீர்கள். நாங்கள் இப்போது யூதரல்லாத புறஜாதி மக்களிடம் பேசுவோம்.”

**புறஜாதியார்:** “தேவன் உங்களை எங்களிடம் அனுப்பியதற்காக நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.” “இயேசுவைப் பற்றி மேலும் கூறுங்கள். நாங்கள் அவரை நம்புகிறோம்.”

யூதர்கள் : “நாம் இந்த மனிதர்களை நகரத்தை விட்டு வெளியேற்ற வேண்டும்.” பவுலையும் பர்னபாவையும் பிடித்துத் தள்ளுகின்றனர். தங்கள் செருப்புகளில் இருந்த தூசியைத் தட்டிவிட்டு இருவரும் நடந்து போகிறார்கள்.

**கதை கூறுபவர் அல்லது ஒரு பெரிய பிள்ளை:** நாடகத்துக்கு உதவியவர்களுக்கும், கேட்ட பெரியவர்களுக்கும் நன்றி கூறுதல்.

**வரைக** : பாதங்களின் படத்தை வரையவும். சிறுவர்கள் அதைப் பார்த்து வரையட்டும். அடுத்த ஆராதனை வேளையின் போது அவர்கள் தாங்கள் வரைந்த படத்தைப் பெரியவர்களிடம் காட்டி, அது இயேசுவைப் பற்றிய நற்செய்தியைக் கேட்க ஆயத்தமாய் இருக்கும் மக்களைக் கண்டுபிடிக்க தேவன் எவ்வாறு நம்மைப் புதிய இடங்களுக்கு அனுப்புகிறார் என்பதைச் சித்தரிக்கிறது என்று விளக்கவும். பெரியபிள்ளைகள் சிறுவர்களுக்கு உதவி செய்யவும்.



**கேட்கவும்:** பவுலையும் பர்னபாவையும் பற்றிய கேள்விகளைக் கேட்கவும்.

- சிறுவர்களிடம் கேளுங்கள், “புதிய இடங்களுக்கு நற்செய்தியை எடுத்துச் சென்ற மக்களைப் பற்றி வேறு உதாரணங்கள் எவை?”
- குழந்தைகள் உதாரணங்களைத் தரட்டும்.
- இந்த நாடகத்தைச் சிறுவர்கள் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால் அவர்களிடம் இதே கேள்விகளையும் சிறுவர்கள் கேட்கட்டும்.
- மேலும், பக்கம் 1 ல் பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளையும் சிறுவர்கள் பெரியவர்களிடம் கேட்பார்களாக.

யோசுவா. 1:9 ஐ **மனப்பாடம்** செய்க.

**சங்கீதம்:** சங்.29:1-4 ஐ நான்கு சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்.

நற்செய்தியைத் தொலைதூர இடங்களுக்கு எடுத்துச் செல்லும் மக்களைப் பற்றி **பெரிய குழந்தைகள்** கவிதை பாடல் அல்லது சிறுகதை எழுதட்டும்.

**ஜெபம்:** “அன்பான கர்த்தாவே, உம்மைப் பற்றி அறியாத மக்களிடம் பவுலையும் பர்னபாவையும் போன்ற மக்களை அனுப்ப நீர் விரும்புகிறீர். எங்களை நீர் போகச் சொல்லும்போது அந்தக் குரலைக் கேட்க எங்களுக்கு உதவி செய்வீராக. பவுலையும் பர்னபாவையும் போன்று நற்செய்தியை நாங்களும் தைரியமாகப் பேச உமது பரிசுத்த ஆவியால் எங்களை நிரப்புவீராக.”

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net